சிலப்பதிகாரம்

* வினா.—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-66-க்கான (S.S.L.C.) இந்தி பாட புத்தகத்தில் (குல்தஸ்த்தா) சிலப்பதிகாரத்தை ஓரங்க நாடகமாக எழுதியதில், பாண்டிய மன்னனை (நெடுஞ்செழியன்) குடிகாரனாகவும், பாண்டி மாதேவியின் இரண்டு சிலம்புகளுமே களவு போயிற்று என்றும் சிலப்பதிகாரத்தின் சிறப்பையே மாற்றி எழுதப்பட்டு இருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) நாடகத்தை மேலும் விறுவிறுப்பாக்குவதற்காக ஆசிரியர் அதிக உரிமை எடுத்துக்கொண்டு கதையை மாற்றியுள்ளதாகத் தெரிகிறது. இப்புத்தகம் இப்போது பள்ளிகளில் பாட புத்தகமாக பயன்படுத்தப்படுவதில்லை.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தப் பாடப் புத்தகத்தைத் திருத்தி, நல்ல கருத்து தோன்றும் முறையில் எழுதுவதற்கு இந்த அரசு வழிவகை செய்வார்களா? அதைத் திருத்தாவிட்டால், மற்ற மாநிலங்களில் இதுபோன்ற தவறான பிரச்சாரம் செய்வதற்கு வழிவகை இருக்காதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தப் புத்தகத்தை பாடப் புத்தகத்திலிருந்து அறவே எடுத்தாகிவிட்டது, அந்தப் புத்தகத்தை எழுதிய ஆசிரியருக்கு உண்மைக் கருத்துக்களைத் தெரிவிக்கின்ற முறையில் முயற்சிகள் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. சா. மெய்யப்பன் : அதுமாதிரி, தமிழர்களுடைய பண்பாட்டை இழிவுபடுத்தும் முறையில் நீதிக்குப் பேர்போன பாண்டியனை குடிகாரன் என்பதாகச் சித்தரித்து நூல் எழுதிய ஆசிரியரின்மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அப்படி எந்த ஆசிரியரும் வேண்டுமென்று பழி சுமத்தியிருப்பார் என்று கருதத் தேவையில்லை. அவருக்குத் தவறான தகவல்கள் கிடைத்திருக்கலாம். தம் தவறைத் திருத்திக்கொள்ள நாம் அவருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

Officers brought over to Industries Department

* 4 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of officers brought from the Electricity Department to the Industries Department;

(*b*) the different dates on which they were brought to the Industries Department;

1968 பிப்ரவரி 12]

(*c*) whether their services have been regularised and the increments due, have been paid; and

(*d*) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) தொழில் துறையிலுள்ள, தமிழ்நாடு தொழிற்பணியில் 3-வது வகையைச் சேர்ந்த பதவிகளில் நியமிக்கப்படுவதற்காக தமிழ் நாடு, மாநில மின்சார வாரியத்திலிருந்து கீழ்க்கண்ட 15 அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் :—

	அதிகாரியின் பெயர்.	வேலை ஏற்றுக்கொண்ட நாள்.	
	(1)	(2)	
1	திரு. இ. என். நாராயணசுவாமி	24—8—55	முற்பகல்.
2	திரு. டி. சோமசுந்தரம்	23—8—55	,,
3	திரு. ஜி. துரைராஜ்	22—5—57	,,
4	திரு. கே. தெய்வநாயகம்	9—4—57	,,
5	திரு. என். சுந்தரம்	14—3—57	,,
6	திரு. வ. பாலகிருஷ்ணன்	11—8—58	,,
7	திரு. பி. பாலசுப்ரமணியம்	18—9—58	மாலை.
8	திரு. டி. என். நரசிம்மபிரசாத்	24—4—59	முற்பகல்.
9	திரு. எ. வாசுதேவன்	24—10—58	,,
10	திரு. பி. கே. ரமணன்	30—3—59	,,
11	திரு. என். வி. ராஜப்பா	11—7—60	,,
12	திரு. சி. ஆர் காமத்	29—7—60	,,
13	திரு. எஸ். எம். அஹமது இப்ராஹிம்	8—7—60	,,
14	திரு. எஸ் விஜயராகவன்	15—7—60	,,
15	திரு. பி. என். சேதுராமன்	26—10—60	,,

(உ) இன்னும் தொழில் துறையில் உள்ள பத்து அதிகாரிகளின் பணி முறைப்படுத்தப்பட்டு, இதுபோன்ற தேர்வுகளில் வழக்கமாகக் கொடுக்கப்படும் சம்பள உயர்வுகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

(எ) இவ்வினா எழுவில்லை.

DR. H. V. HANDE: Will the Minister for Industries give an assurance to this House that he will take particular care to see that the services of such of those officers as have not been regularised will be regularised? The trouble appears to be that the Finance Department has not yet passed orders regularising the services, and regularisation confers on the officers certain benefits like increments. Is it a fact that the delay is in the Finance Department and, if so, will the Minister get in touch with that Department and see that the services are regularised as early as possible?

MR. SPEAKER: During question hour members can only ask for information and not for assurances.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பதினைந்து பேர்களில் 5 பேர்கள் வெவ்வேறு வேலைகளுக்குப் போய்விட்டார்கள். பாக்கியுள்ள 11 பேர்களில் 9 பேர்களுடைய பிரச்சினையும் தீர்க்கப்பட்டு அவர்கள் ரெகுலரைஸ் செய்யப்பட்டு, இன்க்ரிமெண்ட் எல்லாம் வழங்கப்பட்டு விட்டது. மற்றவர்களைப் பற்றியும் நடவடிக்கை எடுக்க விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. விவரங்கள் கிடைத்த பிறகு என்ன செய்யலாம் என்பது யோசிக்கப்படும்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : மின்சார வாரியத்தில் இருந்து கொஞ்ச காலத்திற்கு முன் வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்டு திரும்பியவர்களின் சம்பளம், அலவன்சு முதலியன இன்னும் தீர்க்கப்படாமல் இருப்பது பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா? உடனடியாக அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் கிடைக்கவில்லை. கனம் அங்கத்தினர் அந்த விவரங்களைக் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

Autorickshaws

*5 Q.—THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Public Works Department be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the number of autorickshaws plying in the City of Madras and to permit the plying of autorickshaws in other districts; and

(*b*) if so, the reasons thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) சென்னை மாநகரில் ஓடிக் கொண்டிருக்கும் ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை. மற்ற மாவட்டங்களில் ஏற்கெனவே ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

(இ) இவ் வினா எழவில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : 1967-68-இல் இந்த ஆட்டோ ரிக்ஷாக்களினால் ஏற்பட்ட விபத்துகள் எவ்வளவு? அவற்றில் மரணம் அடைந்தவர்கள் எவ்வளவு? காயம் அடைந்தவர்கள் எவ்வளவு? ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு ஸ்பீட் லிமிட் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முதல் கேள்வி விபத்துக்களைப் பற்றியது அல்ல. அப்படி ஒரு கேள்வி கேட்டால் விவரம் தர உதவியாக இருக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : சென்னையை அடுத்த பெரிய நகரமாக மதுரை விளங்குவதன் காரணத்தினால் மதுரையில் மேலும் ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை விஸ்தரிக்க அரசாங்கம் முன்வருமா?